**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.STC.465/2021**

| Deposition of Name | ரேணுகா | Prosecution | |
|---|---|---|---|
| Father Name | க/பெ.குணசேகரன் | Defence | DW1. Cross |
| Village | தென்பாதி, சீர்காழி | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 45/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **19.01.2026.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கடந்த 03.03.2020 அன்று நான் புகார்தாரருக்கு எதிராக சீர்காழி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லும் நிலையில் அதற்கு சான்றாக அந்த புகார் நகலோ அல்லது வேறு அத்தாட்சி ஆவணமோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் என்னிடம் அத்தாட்சி உள்ளது. அதே போல புகார்தாரர் என் மீது 21.08.2020 ல் என் மீது புகார் கொடுத்தாகவும் நான் ரூ.3,01,650/- மட்டுமே கொடுக்க வேண்டும் என்றும் அந்த தொகையை 21.12.2020 க்குள் வாதிக்கு நான் கொடுக்க வேண்டும் என எழுதி வாங்கிக்கொண்டதாக சொல்லும் நிலையில் அதற்கு சான்றாக ஆவணங்கள் எதுவும்இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் அதற்கான ஆவணங்கள் என்னிடம் உள்ளது.

மேற்படி விபரங்களை மறைத்து நான் கடந்த 05.11.2020 ந்தேதி அன்று வழக்கறிஞர் கார்த்திக் ராஜன் மூலமாக ரூ.5,95,000/- கொடுத்துவிட்டதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கில் எனது வங்கியை சார்ந்த கிளை மேலாளரை விசாரித்துள்ளார்கள் என்றால் சரிதான். என்னுடைய வங்கி கணக்கு பட்டியல் வாசாஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால்

KAILAASH R Digitally signed by KAILAASH R Date: 2026.01.19 17:15:05 +0530

சரிதான். அதில் காசோலைக்குரிய தொகை கணக்கில் இ்ல்லை என்பதால் Reffer to Drawer என்னும் குறிப்போடு காசோலை திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வாதி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் காசோலை கொடுத்து அந்த காசோலை வசூலாகதா காரணத்தால் மாற்று முறை ஆவண சட்டப்படி எனக்கு தண்டணையும் அபராதமும் விதிக்கப்பட வேண்டும் என்று சொல்லி தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

எனக்கு எதிராக வாதி சீர்காழி சார்பு நீதிமன்றத்தல் அசல் வழக்கு எண் 6/2023 ல் ஒரு வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கு நான் வாதிக்கு எழுதி கொடுத்த அடமாணத்தின் பேரில் தாக்கல் நடந்து வருகிறது என்றால் சரிதான். காலாவதி சட்டத்திற்கு உட்பட்டு அந்த வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த குற்றவியல் வழக்கு செல்லாது என நான் கட்சி செய்வது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இதே கட்சியை தான் நான் அந்த உரிமையியல் வழக்கிலும் எடுத்துள்ளேன் என்றாலும் அதுவும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. நான் புகார்தாரருக்கு இந்த வழக்கில் சொல்லியுள்ள கடன் தொகையை கொடுக்க கடமை பட்டவர் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரை ஏமாற்றுவதற்காக பொய் வழக்கு நடத்திவருகிறேன் என்றால் சரியல்ல. நான் மாற்றுமுறை ஆவணசட்டப்படி தண்டிக்கதக்கவர் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.01.19 17:15:14 +0530